# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## சட்ட ஆணைக்குழு (திருத்தம்)

***1969 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, சட்ட ஆணைக்குழுச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நீதி அமைச்சர் அவர்களால் 2016, ஒகத்து மாதம் 09 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2016, மே மாதம் 23 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ ***126 ஆம் சட்டமூலம்*** ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 6.00*** ***தபாற் செலவு : 10.00***

2-PL 010118 - 475 (2016/08)

***சட்டப்பயன் பற்றிய கூற்று***

***வாசகம் 2*** : *இவ்வாசகமானது, (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1969 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, சட்ட ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவை திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனாவது சட்ட ஆணைக்குழுவின் அமைத்துருவாக்கத்தை மாற்றுவதாகும்.*

***வாசகம் 3*** : *இவ்வாசகமானது, முதன்மைச் சட்டவாக்கத்தில் 8 ஆம் பிரிவை திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனாவது "ஆணையாளர்" என்ற பதவிப்பெயரை "ஆணைக்குழுவின் உறுப்பினர்" என மாற்றுவதாகும்.*

***வாசகம் 4*** : *இவ்வாசகமானது, முதன்மைச் சட்டவாக்கத்தில் 11 ஆம் பிரிவை திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனாவது "அமைச்சின் நிரந்தர செயலாளர்" என்ற பதவிப்பெயரை "அமைச்சின் செயலாளர்" என மாற்றுவதாகும்.*

***வாசகம் 5*** : *இவ்வாசகமானது, முதன்மைச் சட்டவாக்கத்தில் 12 ஆம் பிரிவை திருத்துகின்றதென்பதுடன், 8 ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தங்களுக்கான விளைவாந்தன்மையினதாகும்.*

***வாசகம் 6*** : *இவ்வாசகமானது, முதன்மைச் சட்டவாக்கத்தில் 13 ஆம் பிரிவை திருத்துகின்றதென்பதுடன், 8 ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தங்களுக்கான விளைவாந்தன்மையினதாகும்.*

ச.வ.-ஓ. 52/2015

**1969 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, சட்ட ஆணைக்குழுச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின்    ஆம் இலக்க, சட்ட ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1969 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, சட்டத்தின் 2 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல்.

**2.** 1978 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1969 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, சட்ட ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது :-

"சட்ட ஆணைக் குழுவினைத் தாபித்தலும் அமைத்துருவாக்குதலும்.

2. (1) சட்ட ஆணைக்குழு என அழைக்கப்பட வேண்டிய ஆணைக்குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அது பின்வருவோரைக் கொண்டிருத்தலும் வேண்டும் –

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் :-

(i) நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சின் அமைச்சுச் செயலாளர் அல்லது சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஒருவரின் பதவி வரிசைக்கு குறையாத பதவி வரிசையிலுள்ள அவரின் நியமத்தர் ;

(ii) சட்டத்துறைத் தலைமையதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மேலதிக மன்றாடியார் தலைமையதிபதி பதவி வரிசைக்கு குறையாத பதவி வரிசையிலுள்ள அலுவலர் ஒருவர் ; அத்துடன்

(iii) சட்டவரைஞர் அல்லது சிரேஷ்ட உதவிச் சட்டவரைஞர் ஒருவரின் பதவி வரிசைக்கு குறையாத பதவி வரிசையிலுள்ள அவருடைய நியமத்தர் ; அத்துடன்

(ஆ) அத்தகைய நியமனத்திற்குப் பொருத்தமாகத் தகைமைபெற்றவர்களென சனாதிபதிக்குத் தோன்றுகின்ற ஆட்களிடையேயிருந்து (இதனகத்துப்பின்னர் “நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்” என குறிப்பீடுசெய்யப்படும்) சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பத்துக்குக் குறையாததும் பதினான்கிற்கு மேற்படாததுமான வேறு உறுப்பினர்கள். அவர்களில் பெரும்பான்மையோர் நீதித்துறைப் பதவி வகித்திருந்தவர்களான அல்லது வகிக்கின்றவர்களான அல்லது சட்டத்தரணிகளாகவோ அல்லது சட்டத்துறையில் ஆசிரியர்களாகவோ அனுபவமுள்ளவர்களான அல்லது சட்டத்தில் கல்விசார் அடிப்படையில் தகைமைபெற்றவர்களான ஆட்களாக இருத்தலும் வேண்டும்.

(2) சனாதிபதி ஆணைக்குழுவின் தவிசாளராக இருப்பதற்கு ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அவருடைய பதவியை முன்னரே வறிதாக்கினாலன்றி, அவர் நியமிக்கப்பட்ட நேரத்தில் சனாதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஐந்து ஆண்டுகளை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிக்கு பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன் மீள நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையவராதலும் வேண்டும்.

ஆயினும், எவ்வாறாயினும், நியமிக்கப்பட்ட உறுப்பினர், அவரது பதவிக்காலம் முடிவுறாதிருக்கு முன்னர் அவரது பதவியை வறிதாக்கியிருப்பின், அவரது அடுத்துறுபவர், அவரது பதவியை முன்

னரே வறிதாக்கியிருந்தாலன்றி, அவ்வுறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு அவர் அடுத்துறுகின்றாரோ அக்காலப்பகுதிக்கு மட்டும் பதவிவகித்தல் வேண்டும்.

(4) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட அவரது கைப்பட்ட கடிதத்தின்மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம்.

(5) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் அவர்களுடைய சேவைகளுக்காக ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.".

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவானது "எவரேனும் ஆணையாளருக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவானது "அமைச்சுக்கான நிரந்தர செயலாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அமைச்சுக்கான செயலாளர்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவானது "ஆணையாளர்களின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆணைக்குழுவின் உறுப்பினர்களின்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது "ஆணையாளர்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**7**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*